DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதன்கிழமை 29ம் நாள் சாட்சியாகிய ஓவியா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஓவியா | வயது | 37 |
| க/பெ. | அருள் | இனம் | பெண் |
| கிராமம் | மேல்பாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.27/2024**

(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை 29.01.2025 அ.சா.1</u>**

1. நான் மேல்பாக்கத்தில் வசித்து வருகிறேன். 04.06.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது எதிர் வீட்டை சேர்ந்த கருணாகரன், துளசி, சித்ரா, கமலகண்ணன் ஆகியோர்கள் குப்பையை எடுத்து வந்து எனது வீட்டு வாசலில் போட்டார்கள். அதே இடத்தில் அடுப்பு பற்றவைத்தார்கள்.

2. எங்களிடத்தில் அடுப்பு பற்ற வைக்காதீர்கள் என்று சொன்னதற்கு நான்கு பேரும் என்னை அசிங்க, அசிங்கமாக பேசினார்கள். கமலகண்ணன் என்னை எட்டி உதைத்து அசிங்கமாக திட்டினார். வீட்டை விட்டு காலி செய்து செல்ல வேண்டும் என்றும் இல்லை என்றால் எனது குடும்பத்தை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள்.

3. எனது கணவர் அருள் வந்து கேட்ட போது அவரையும் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். 4ம் தேதி சம்பவம் நடந்தது. புகார் கொடுக்க சென்ற போது விசாரித்து விட்டு வாங்குவதாக தெரிவித்தார்கள். மறுநாள் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள் அப்போதும் நான்கு நபர்களும் மீண்டும் அசிங்கமாக பேசினார்கள்.

4. மீண்டும் அதிகமாக பிரச்சனை செய்து அடித்தார்கள். நான் 6ம் தேதி புகார் கொடுக்க சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில்

உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கமலகண்ணன் தான் என்னை அடித்தார். ஆனால் அவர் மீது போலீசார் வழக்கு தாக்கல் செய்யவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

5. எனது கணவர் சர்வேயராக வேலை செய்து வருகிறார். எனது கணவர் மேல்பாக்கம் கிராமத்தில் வீட்டிற்கு எதிரே உள்ள நிலத்தை அளந்ததால் எதிரிகளுக்கும், எங்களுக்கும் முன்விரோதம் உள்ளது. அதன் காரணமாக தான் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5 எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.